**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.49/2025 – PW- 5**

| | |
|---|---|
| Name | திரு. நந்தக்குமார் |
| Husband/Father Name | கோவிந்தசாமி |
| Village /Area | கீரைச்சாத்து |
| Taluk | பொன்னை |
| Occupation | விவசாயம் |
| Age | 37 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். நான் சோளிங்கர் பஸ் ஸ்டான்டிற்கு செல்லும் போது 15.01.2025 அன்று ராஜேஷ் என்பவரை போலீசார் விசாரித்துக் கொண்டிருந்தார்கள். கீரைச்சாத்து கிராமத்தில் அங்கன்வாடியில் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் வாகனத்தை நிறுத்திவிட்டு தினமும் இரவில் மது அருந்துவதாகவும், இது குறித்து அங்கன்வாடி மைய ஆசிரியர் மேற்படி நபர்களை அங்கன்வாடி மையத்திற்குள் மது அருந்தக்கூடாது என்று கூறியதாகவும், மேலும் கிராமத்தை சேர்ந்தவர்களும் மேற்படி ஓட்டுநர் மற்றும் நடத்துனரை அங்கன்வாடி மையத்தில் மது அருந்தக்கூடாது என்று கூறியும் மேற்படி நபர்கள் 14.01.2025 அன்று மீண்டும் அங்கன்வாடி மையத்திற்குள் அமர்ந்து மது அருந்தியதாகவும், இது குறித்து கேட்ட போது பிரச்சனை ஏற்பட்டதாகவும் விசாரணையின் போது அவர் கூறியதை எங்கள்

முன்னிலையில் பதிவு செய்தார்கள். காவல் துறையினர் பதிவு செய்த வாக்குமூலத்தில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதன் பேரில் நானும் என்னுடன் பிரகாஷ் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது **அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரியை எனக்கு தெரியும் நானும் அவரும் ஒரே ஊர்காரர்கள் தான். சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. எதிரி 15.01.2025–ம் தேதி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். எதிரி என் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாரா என்றால் அவரை விசாரித்துக்கொண்டிருந்தார்கள் ஆனால் முழுமையாக என்ன கூறினார் என்று எனக்கு தெரியாது.

நான் மேற்படி தேதியில் அந்த வழியாக சென்றுக் கொண்டிருந்தேன். நான் எழுதியிருந்த தாளில் கையொப்பம் இட்டேன். அதில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியுமா என்றால் சம்பவ விவரங்கள் தான் எழுதியிருப்பார்கள் என்று நினைத்து நான் கையொப்பம் இட்டேன். சம்பவத்தை ஊர்காரர்கள் பேசிக்கொண்டதன் அடிப்படையில் தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். போலீசார் கையொப்பம் இடச் சொன்னதன் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். நானும் பிரகாஷீம் தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் இட்டோம். நான் எத்தனை தாள்களில் கையொப்பம் இட்டேன் என்று ஞாபகம் இல்லை.

வழக்கில் நான் கூறியுள்ள சங்கதிகள் பொய் என்றும்

எதிரிக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நடந்ததை கூறினேன்.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:29:36 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.